3rd November 1965]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இப்போது கொடுக்கக்கூடிய உதவித் தொகை கடனைக் கொடுக்கப்படுகிறது. நிறைய மார்க்குகள் வாங்குகிறவர்கள் தங்களுடைய தகுதி காரணமாக இரண்டாகவே பெற்று விடுகிறார்கள். ஆகவே, குறைந்த மார்க் வாங்கியிருந்தவர்களாக இருந்தாலும் கடனைக் கொடுக்கப்படுகிற காரணத்தால் அந்த மார்க் விகிதத்தைக் குறைத்து, 40 மார்க்குகள் வாங்கினாலும் கடனைக் கொடுக்க உத்தரவாதம் தரப்படும் என்றளவிற்காவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசாங்கம் கொடுக்கிற திட்டம், இது. அதற்கு ஓரளவு பணம் ஒதுக்கி வைத்து எல்லா மாநிலங்களுக்கும் வழங்குகிறார்கள். கொஞ்சம் தரமுள்ள மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டும், அப்போதுதான் போதுமானபலன் அளிக்கும் என்ற வகையில் குறைந்தபட்ச மார்க் விதிக்கப்பட்டிருக்கிறது. முன்பே கூறியதுபோல் 60 என்பது 55 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் குறைப்பதற்கு உத்தேசமில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத்தலைவர் அவர்களே, மாணவர்களுக்குக் கடன் கொடுப்பது என்பது ஆண்டு தோறும் இவ்வளவுதான் கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படுகிறதா ? அல்லது தகுதியுள்ள விண்ணப்பங்கள் அத்தனைக்கும் தரலாம் என்று விதி இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இவ்வளவு பணம் என்று ஒதுக்குகிறார்கள். அந்தப் பணத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்கள். எவ்வளவு மாணவர்கள் என்று தேர்ந்தெடுத்து அதற்கேற்ற வகையில் இந்த இந்த மாணவர்களுக்குக் கொடுக்கலாம் என்று இந்த அரசாங்கம் சிபார்சு செய்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : இந்தக் கடன் கொடுத்திருப்பதில் கோவை மாவட்டத்திற்கு 335 என்றும், வட ஆற்காடு மாவட்டத்திற்கு 72 என்றும் இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டம் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய மாவட்டம். அதற்குக் கடனைக் கொடுக்கும் தொகை குறைந்திருக்கிறது. கோவை மாவட்டம் செல்வந்தர்கள் வாழும் மாவட்டம். அங்கு அதிகமாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வட ஆற்காடு மாவட்டத்தில் கல்லூரிகள் மிகவும் குறைவு. அதிலும் ப்ரொஃபெஷனல் கல்லூரியே இல்லை. கோவையில் எல்லாம் இருக்கின்றன. அதுதான் காரணம்.

Evening Colleges

* 238 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there has been poor response from women for the Evening College for Women at Madras;

(b) if so, the reasons therefor; and

(c) whether the Government have proposed to open a few more Evening Colleges for Men in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No. The response is satisfactory.

(b) Does not arise.

(c) No.

திரு. வை. சங்கரன் : மதுரையில் இதுபோன்ற கல்லூரி ஆரம்பிக்கும்போது, இருக்கும் இடங்கள் தூரமாக இருப்பதால், கல்லூரி நேரம் சௌகரியமாக இல்லை. ஆகவே, இதற்கு போதுமான ஆதரவு இல்லை என்ற தகவல் வந்திருக்கிறதா? அப்படியானால், போதுமான அவகாசம் கொடுத்து, அவரவர் ஆபீஸ் வேலை நேரம் முடிந்து சுமார் ஒரு மணி நேரம் அவகாசம் கொடுத்து அதற்கேற்ற வகையில் மாலைக் கல்லூரிகள் அமைக்க உத்தேசிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஆண்டு, மதுரை தகுதியுள்ளதா என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டிய நிமித்தம் ஏற்படவில்லை. மூன்று கல்லூரிகள் முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் மாலை வகுப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மதுரையை எடுத்துக் கொள்வது என்பது பின்னால் அடுத்த ஆண்டில் யோசிக்கப்படவேண்டிய விஷயம்.

திரு. ம. கமலநாதன் : இந்த மாலை நேரக் கல்லூரிகளில் சேர்ந்திருக்கும் அலுவலர்களைப் பொறுத்து, அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் படிப்பு முடியும் வரையில் அவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட மாட்டார்கள் என்ற உறுதி அளிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் படிப்புப்பற்றிதான் உறுதி. உத்தியோகத்தைப் பற்றி உறுதி இல்லை.

*** 239 கேள்வி.—திரு. கோ. சி. மணி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பட்டப் படிப்புக்கான மாலை நேர வகுப்புகள் துவக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

தமிழ்ப் பயிற்சி மொழிக் கல்லூரிகள்

*** 240 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1965-66-ம் ஆண்டு வரையில் தமிழ் நாட்டில் எந்தெந்தக் கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் நடைமுறையில் உள்ளது ?